

நீடாமங்கலம் பேரூராட்சிக்குட்பட்ட காங்கேயம் ,மேலத்தெரு , கீழத்தெரு பகுதிகளுக்குட்பட்ட 54 பயனாளிகளின் வீட்டிற்கு நேரடியாக நடந்து சென்று தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர்.டி.ஆர்.பி.ராஜா இலவச பட்டாக்களை வழங்கினார்.உடன் மாவட்ட ஆட்சியர் மோகன சந்திரன், ஒன்றிய செயலாளர் கே.வி.கே.ஆனந்த, மாவட்ட மகளிர் அணி தலைவர் ராணி சேகர் ஆகியோர் உள்ளனர்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தலைவர், தொல். திருமாவளவன் எம்.பி.யின் சிற்றன்னை செல்லம்மாள் அவர்களின் மறைவையொட்டி அவரது உடலுக்கு அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் மாலை அணிவித்து இறுதி அஞ்சலி செலுத்தினார். பின்னர் நடைபெற்ற இறுதி ஊர்வலத்தில் அமைச்சர் சி.வெ.கணேசன், மாவட்டப் பொறுப்பாளர் ஜெகதீசன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணை செயலாளர் துரைசாமி மற்றும் பலர் கலந்து கொண்டு இடுகாடு வரை சென்று அஞ்சலி செலுத்தினார்.





## 40 ஆண்டு கால பிரச்சினை: தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மூலம்

# மக்களுக்கு 90 சதவிகித பிரச்சினைகளைத் தீர்த்திருக்கிறோம்!

## அமைச்சர் சு.முத்துசாமி பேட்டி!

சென்னை, ஆக.20-

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மூலம் 40 ஆண்டு காலமாக சிரமப்பட்டு வந்த மக்களுக்கு 90 சதவிகித பிரச்சினையைத் தீர்த்திருக்கிறோம் என்று அமைச்சர் சு.முத்துசாமி அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சி, மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி நேற்று முன்தினம் (18.8.2025) செய்தியாளர்களை சந்தித்து அளித்த பேட்டி வருமாறு:-

முதலமைச்சர் வீட்டு வசதி வாரியத்தால் நீண்ட நாட்களுக்கு முன்பு சுமார் 4045 ஆண்டு காலத்திற்கு முன்பு கையகப்படுத்தப்பட்ட முயற்சி எடுக்கப்பட்டு அது முழுமையாக நிறைவேற்றப்படாத சூழ்நிலை யில் அந்த நிலங்கள் வாரியமும் பயன்படுத்த முடிய வில்லை.

அதே நேரத்தில் அதனுடைய உரிமையாளரும் அதன்மீது முழுமையான உரிமையை எடுக்க முடியவில்லை என்ற ஒரு சூழ்நிலை வந்தது. இது பல ஆண்டு காலமாக இருக்கின்ற பிரச்சனை. பல நேரங்களில் மனு கொடுத்து பலவிதமாக ஆய்வு செய்து, செய்து ஒவ்வொன்றுமே பெரிய அளவில் வெற்றி பெறாமல் பல பிரச்சனைகள் தொடர்ந்து இருந்து கொண்டே இருந்தது.

இது முதலமைச்சர் அவர்கள் கவனத்தில் சென்ற உடனே உடனடியாக அதற்கான ஒரு நடவடிக்கை எடுங்கள். அந்த நடவடிக்கை என்பது எல்லோருக்கும் ஒரே மாதிரியான நடவடிக்கையாக அது இருக்க வேண்டும். ஒவ்வொருவருக்கும் மாறுபட்ட நடவடிக்கையாக இருக்கக் கூடாது. அவர்களுடைய தகுதிக்கு ஏற்ப அந்த நடவடிக்கைகள் சட்டதிட்டங்கள் என்னவோ அதற்கேற்ப இருக்க வேண்டும் என்று அவர்கள் சொன்னார்கள்.

அதற்காகத்தான் வீட்டு வசதி வாரியமும், நம்முடைய துறையும் இணைந்து அதை என்னென்ன வகையில் அந்த நிலங்கள் இருக்கிறது என்பதை பிரித்தார்கள். அப்பொழுது பிரித்தபொழுது ஐந்து வகையாக பிரிக்கப்பட்டது.

மேலும் ஒரு வகை அந்த நிலத்தை எடுக்கலாம் என்று உத்தேசிக்கப்பட்டது. அதுவும் கூட பதிவு (Record) செய்யப்பட்ட காரணத்தால். அதையும் அவர்கள் விற்பதற்கு NOC தேவை என்ற ஒரு நிலை எல்லாம் இருந்தது.

எனவே, இதையெல்லாம் ஒழுங்குபடுத்தி அதைப் பிரித்துப் பார்க்கின்ற பொழுது, அந்த உத்தேசப் பட்டியலில் இருந்தது ஏறத்தாழ ஒரு 10 ஆயிரத்து 75 ஏக்கர் அதையெல்லாம் ஒரு 3040 ஆண்டுகளுக்கு முன்பே இந்த நிலத்தை எதிர்காலத்தில் எடுக்கலாம் என்று உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

அது ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் எடுத்திருக்க வேண்டும். அதனால், அந்த உத்தேசிக்கப்பட்டது என்று சொன்னதால் அந்த இடத்தை அந்த நில உரிமையாளர் மற்றவர்களுக்கு சிறிது, சிறியதாக விற்றுவிட்டு போய்விட்டார்கள்.

எனவே, அவர்கள் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக ஒரே ஒரு சர்க்குலர் மூலமாக அத்தனையும் அவர்களுக்கு ரிலீஸ் செய்து கொடுக்கப்பட்டு விட்டது. அவர்களுக்கு இந்த மாதிரியான ஒரு பிரச்சினை இருக்கிறது என்பது தெரியாமல் வாங்கி இருக்கிறார்கள். எனவே அவர்களுக்கு ஒரு பாதுகாப்பை ஏற்படுத்துவதற்கு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அது ஏறத்தாழ ஒரு 10 ஆயிரத்து 575 ஏக்கர் அது போக மீதம் இருப்பதை 5 வகையாக (Category) பிரித்தார்கள். அதில் ஐந்தாவது வகை என்பது வீட்டுவசதி வாரியம் முழுமையாக அதை கையகப்படுத்தி, அதில் சில Developments செய்திருக்கிறது. சில இடங்கள் அதில் Developments பாதியிலேயே இருக்கலாம். எனவே அது ஐந்தாவது வகை. அதை பொறுத்தவரை வீட்டு வசதி வாரியம் முழுமையான உரிமையை கொண்டது.

1 மற்றும் 2வது வகை என்பது Fore and Notice கொடுப்பது இதனுடன் நின்றிருக்கிறது. எனவே அதைப் பொறுத்தவரை அதற்கு மேலே வீட்டு வசதி வாரியம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. வருவாய்த்துறை மூலமாகத்தான் இதை எல்லாம் எடுக்கிறார்கள். எனவே Fore and Notice கொடுத்து அதோடு நின்று போய்விட்டது.

அந்த 1 மற்றும் 2வது வகை (Category) என்பதில், மேலும் 40 வருடங்களுக்கு மேல் ஆகி விட்டது என்பதால், மேல் நடவடிக்கை எடுக்க முடியாது காரணம் அவைகள் எல்லாம் தெரியாமல் சிறிது சிறிதாக விற்கப்பட்டு விட்டது. அதில் நாம் கொண்டுவர முடியாது. அப்படி கொண்டு வருவதாக இருந்தால் பல ஆயிரக்கணக்கானோர் வீடுகளை இடிக்க வேண்டி வரும். அதுவும் மிகச் சாதாரணமாக இருக்கின்ற மக்களுடைய வீடுகள் தான் அதில் பாதிக்கப்படுகிறது.

சில வழக்குகள் நீதிமன்றத்தில் போய் கூட அவர்கள் இடையிலே அதற்கான தீர்ப்பையும் வாங்கி வந்திருக்கிறார்கள். இவ்வளவு நாட்களாக ஏன் நீங்கள் அந்த திட்டத்தை நிறைவேற்றவில்லை என்று நீதிமன்றம் கேள்வி கேட்டிருக்கின்றது. இதற்கு முன்னால் அமைக்கப்பட்ட கமிட்டியும் கூட அந்த கேள்வியை கேட்டிருக்கிறது. எனவே, இந்த 1 மற்றும் 2வது வகை (Category) என்று இருக்கின்ற அந்த நிலங்களை நாம் ரிலீஸ் செய்து கொடுத்து விடுவது என்று ஒரு கொள்கை முடிவாக எடுக்கப்பட்டது.

### 4,396.44 ஏக்கர் ரிலீஸ்

அதன்படி பார்த்தால் அரசாணை வெளியிட்டு, ஏறத்தாழ 4,396.44 ஏக்கர் ரிலீஸ் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. அதில் பெரும்பகுதி அவர்களுக்கு கொடுக்கப்பட்டுவிட்டது. மீதமுள்ள 743 ஏக்கர் அவர்களுக்கு அரசாணை கொடுப்பதற்கான ஏற்பாடு நடந்து கொண்டிருக்கிறது. எனவே, இந்த 1 மற்றும் 2வது வகையில் ஏறத்தாழ 4,396.44 ஏக்கர் ரிலீஸ் செய்து கொடுக்கப்பட்டுவிட்டது.

40 ஆண்டு காலமாக இருந்த பிரச்சனை பல லட்சம் குடும்பங்கள் அதில் பாதிக்கப்பட்டிருந்தது. அவர்கள் (Innocent purchasers) தெரிந்து வாங்கவில்லை. இந்த நோட்டீஸ் கொடுத்தே அவர்களுக்கு தெரியாது. எனவே, அவர்கள் அதை வாங்கி விட்டார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு ஒரு பாதுகாப்பை இந்த அரசாங்கம் முதலமைச்சர் அவர்கள் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அதில் மீதமிருப்பது இன்னொரு 743 ஏக்கர் இருக்கிறது. அதில் 743 ஏக்கர் கொஞ்சம் உடனே கொடுத்து விடுவதற்கான வாய்ப்பு இருக்கிறது. சிலவற்றில், நீதிமன்ற வழக்கு போன்ற பிரச்சினைகள் இருக்கிறது. எனவே, அதையும் பகுப்பாய்வு செய்துவிட்டு, அதற்குப் பிறகுதான் அதில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனால், ஏறத்தாழ 90% பிரச்சனைகள் 40 ஆண்டு காலமாக சிரமப்பட்டு வந்த அந்த மக்களுக்கு தீர்க்கப் பட்டிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதற்கடுத்தது 3 மற்றும் 4வது வகையை (Category) பொறுத்தவரை, அதற்காக இரண்டு ஓய்வு பெற்ற அதிகாரிகள் நியமிக்கப்பட்டு, அவர்கள் அதை இப்பொழுது ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள். அதில் நிறைய ஆய்வுகளை அவர்கள் எடுத்திருக்கிறார்கள். காரணம், அதில் பல தாக்கீதுகள் அதில் (Records) இருக்கிறது. கோர்ட் ஆர்டர் இருக்கிறது. அரசாங்கம் போடப்பட்ட உத்தரவு இருக்கிறது.

வீட்டுவசதி வாரியம் அதில் என்ன செய்தார்கள் என்பது போன்ற அனைத்தும் இருக்கிறது. இத்தனையும் அவர்கள் ஆய்வு செய்து அவர்கள் கொடுக்கும் பரிந்துரையின் படி அந்த நடவடிக்கைகள் எடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது. அவர்கள் செப்டம்பர் அல்லது அக்டோபரில் கொடுத்துவிடுவதாக முதலில் சொல்லியிருந்தார்கள். ஆனால், அந்த பேப்பர் பெரிய அளவில் இருக்கிறது. அதையெல்லாம் முழுமையாக அவர்கள் ஆய்வு செய்து கொடுக்க வேண்டும். அப்போது தான் அதில் எந்த குறையும் இல்லாமல், எந்த தவறும் இல்லாமல் இருக்கும். இது எல்லாவற்றையும் அவர்கள் பார்த்து எதிலும் தவறில்லாமல் பரிந்துரையை அரசுக்கு கொடுக்க வேண்டும். அது அநேகமாக நவம்பருக்குள் கொடுத்துவிடுவதற்கான வாய்ப்பு இருக்கிறது.

எனவே, நவம்பருக்குள் அவர்கள் தங்களுடைய அந்த (Opinion) கருத்தைக் கொடுத்து விட்டால் அதை பின்பற்றி வீட்டுவசதி வாரியம் டிசம்பர், ஜனவரிக்குள் மீதமுள்ள அந்த நிலத்தையும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிலத்தை நம்மால் கொடுத்துவிட முடியும்.

இதில் பாதிப்பு என்று சொன்னால், அந்த நில உரிமையாளர் பழைய உரிமையாளர் என்பது அல்ல. அவர் இதுபோன்று நோட்டீஸ் வந்திருப்பது வெளியே தெரிவிக்காமல் அல்லது அதைபற்றி அவர் யோசிக்காமல், புரிதல் அவர்களுக்கு இல்லாமல் இருந்திருக்கலாம். அதனால் அதை விற்றுவிட்டு சென்று விட்டார்கள். விற்றுவிட்டு சென்றவர்கள் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு வீடு கட்டுவதற்கு அனுமதி கொடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கு குடிநீர் இணைப்பு வசதி கொடுத்திருக்கிறார்கள். அங்கு சாலை அமைத்து கொடுத்திருக்கிறார்கள்.

இதுபோன்று இருக்கின்ற வீடுகளை இடித்தால் அது மிகப்பெரிய தவறு என்று தான் முதலமைச்சர் அவர்கள் இப்படிப்பட்ட நடவடிக்கை எடுத்தார்கள். ஆனால், அதே நேரத்தில், வீட்டுவசதி வாரியத்திற்கோ, அரசாங்கத்திற்கோ இதில் எந்தவிதமான நஷ்டமும் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காக வாரியம் என்ன செலவு செய்திருக்கிறதோ, அந்த தொகை மற்றும் அதற்கான வட்டியினை இது அரசாங்கத்திற்கோ, வாரியத்திற்கோ திருப்பி கிடைக்க வேண்டும் என்பதிலும் தெளிவாக இருக்கிறார்கள்.

அது மிக நியாயமானதாக அவர்கள் தாங்கக்கூடிய சக்தி படைத்ததாக அது இருக்க வேண்டும் என்பதையும் முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஏனென்றால், நிலஉரிமையாளருக்கே (Original owner) செல்கிறது என்றால், சிறிது முன் பின் இருக்கலாம். ஆனால், தெரியாமல் வாங்கியவர்கள் மார்க்கெட் தொகையை கொடுத்து வாங்கிவிட்டார்கள். எனவே, அவர்கள் இப்போது, கொடுப்பது கூடுதலான செலவு. அதனால், நியாயமான அவர்கள் தாங்கும் சக்தி உள்ள அளவில் அதை செய்ய வேண்டும் என்று எங்களுக்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். எனவே, அவர்களும் பாதிக்கக்கூடாது, அரசாங்கத்திற்கும், வாரியத்திற்கும் நஷ்டம் ஏற்படக்கூடாது, நீதிமன்ற உத்தரவுகள், ஏற்கனவே, அரசாணையில் உள்ள உத்தரவுகள் இவையெல்லாம் எதுவும் மீறப்படாமல் மிகச்சரியாக செய்ய வேண்டும் என்பதில் நாங்கள் தெளிவாக இருக்கிறோம்.

### பாரபட்சமும் இருக்கக்கூடாது

இன்னொன்று மிக முக்கியமாக நாங்கள் சொல்ல விரும்புவது, இதில் எந்த பாரபட்சமும் இருக்கக்கூடாது என்பதில் முதலமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். எனவேதான், எங்களிடத்தில் முதலில் மனு கொடுத்தபோது கூட மனுக்களை நாங்கள் வாங்கி அதன் மீது ஆய்வு செய்யுங்கள் என்று சொல்வதற்கு பதிலாக 16 இடங்களில் புகார்பெட்டி வைத்து அதில் மனுக்கள் போடுங்கள் என்று உங்கள் மூலமாக அவர்களுக்கெல்லாம் தெரிவிக்கப்பட்டு, அவர்கள் மனுக்கள் போட்டார்கள்.

அதை அடிப்படையாக வைத்து தான் இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஏனென்றால், நாங்கள் மனுக்களை வாங்கும்போது சிலபேர் மனு கொடுப்பார்கள். சில பேரால் கொடுக்க முடியாது. எனவே, அந்த புகார் பெட்டியில் வரப்பெற்றுள்ள மனுக்களின் அடிப்படையில் அதை ஒரு ஆதாரமாக வைத்துதான் இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

மற்றொன்றையும் சொல்லிவிடுகிறேன். ஒருவேளை புகார்பெட்டியில் போடாமல் இருந்தாலும் கூட இதே வகையில் அவர்கள் தகுதியுடையவர்களாக இருந்தால் அவர்களுக்கும் இந்த சலுகை கிடைக்கும் என்பதை விட உரிமை கிடைக்கும் என்பதை நாங்கள் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம். எனவே, எங்களைப் பொறுத்தவரை இதில் ஒரு சிறு தவறும் கூட ஏற்படக்கூடாது. யாருடைய பரிந்துரையின் பேரிலும் இது நடைபெறகூடாது. இதில் ஒரு கோடு போட்டது போல்தான் அந்த கமிட்டியும் அறிக்கையை கொடுக்க இருக்கிறார்கள். வாரியமும் அப்படித்தான் நடவடிக்கை எடுத்திருக்கிறது.

எனவே, அந்த கோட்டிற்கு இந்த பக்கம் இருப்பவர்களை யாராவது அதிகாரியையோ, அமைச்சரையோ பார்த்து இந்தபக்கம்கொண்டுவரவோ அல்லது அந்த பக்கம் கொண்டுபோகவோ முடியாது. அப்படிப்பட்ட ஒரு நிலையைத்தான் நாங்கள் இதில் உருவாக்கியிருக்கிறோம். எந்த தவறும் இல்லாமல் பாதிக்கப்பட்டவர்கள் இதிலிருந்து வெளியேற வேண்டும் என்பதுதான் நோக்கமாக நாங்கள் செய்து கொண்டிருக்கிறோம்.

இவ்வாறு அமைச்சர் சு.முத்துசாமி பேட்டியளித்தார்.




மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் மயிலாடுதுறையில் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., பேசினார். உடன் கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர்.அருள் செல்வம், கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க.அன்பழகன், சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர்கள் கி.சத்தியசீலன், ஏ.சி.என்.விஜயபாலன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் முத்து. மகேந்திரன், இராம.இளங்கோவன், மாவட்டக் கழக துணைச் செயலாளர் மு.ஞானவேலன் மற்றும் பலர் உள்ளனர்.



திருப்பூர் மாவட்டம், பெருந்துறை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட குன்னத்தூரில் புதிய பேருந்து நிலையம் கட்டுவதற்கு முதலமைச்சர் 3 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்தும், புதிதாக கட்டப்பட்டுள்ள வட்டார மருத்துவ அலுவலகத்தையும் காணொளிக் காட்சி வாயிலாக துவக்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து ஈரோடு மத்திய மாவட்டக் கழகப் பொறுப்பாளர் தோப்பு என்.டி.வெங்கடாச்சலம் கட்டிடம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டி அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கினார். நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் கொண்டசாமி, பொதுக்குழு உறுப்பினர் கேசவன், ஊத்துக்குளி ஒன்றியச் செயலாளர்கள் சுப்பிரமணியம், குன்னத்தூர் ராஜா, குன்னத்தூர் பேரூர் செயலாளர் சென்னியப்பன், பேரூராட்சித் தலைவர்கள் குமாரசாமி, பழனியம்மாள், ராசுக்குட்டி, மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் சக்திவேல், மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் கவுன்சிலர் தனலட்சுமி, பேரூராட்சி கவுன்சிலர்கள் வெங்கடாசலம், முருகசாமி, வெங்கடேசன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# கரூர் ஊராட்சி ஒன்றியத்தில் ரூ. 5.08 கோடி மதிப்பீட்டில் திட்டப் பணிகள்!

## வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

*கரூர், ஆக.20-.*

*கரூர் ஊராட்சி ஒன்றியத்தில் ரூ. 5.08 கோடி மதிப்பீட்டில் 24 புதிய வளர்ச்சித் திட்டப் பணிகளை சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி தொடங்கி வைத்தார்.*

*கரூர் சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில்பாலாஜி, மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல், தலைமையில் கரூர் ஊராட்சி ஒன்றியத்தில் ரூ.5.08 கோடி மதிப்பீட்டில் 24 புதிய வளர்ச்சித் திட்டப் பணிகளை தொடங்கி வைத்தார். பின்னர் வி.செந்தில்பாலாஜி கூறியதாவது*

*தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டில் உள்ள கிராமங்களை நகர்ப்புறத்திற்க்கு இணையாக மேம்படுத்த. ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை அறிவித்து அதற்கு தேவையான நிதிகளை வழங்கி வருகிறார்கள். குறிப்பாக கிராம சாலைகள், தெருவிளக்கு. சுகாதார வளாகம் உள்ளிட்ட உட்கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்காக நிதிகளை அதிகளவில் ஒதுக்கி உள்ளார்கள்.*

*அந்த வகையில், கரூர் ஊராட்சி ஒன்றியம் ஆத்தூர் பூலாம்பாளையம் ஊராட்சியில் ரூ. 2.92 கோடி மதிப்பீட்டில் 9 புதிய சாலைகள் அமைக்கும் பணிகள், 1 சமுதாய கூடத்திற்கு கூடுதல் கட்டிடம் கட்டும் பணிகளும், மண்மங்கலம் ஊராட்சியில் ரூ.12.50 இலட்சம் மதிப்பீட்டில் புதிய சாலை அமைக்கும் பணி, சிறிய சமுதாய கூடம் கட்டும் பணியும்.*

*நன்னியூர் ஊராட்சியில் ரூ. 14.31 இலட்சம் மதிப்பீட்டில் புதிய சாலை, புதிய பயணியர் நிழற்குடை கட்டும் பணியும். வாங்கல் குப்புச்சிபாளையம் ஊராட்சியில் ரூ.1.88 கோடி மதிப்பீட்டில் 10 புதிய சாலை அமைக்கும் பணிகள் மற்றும் பயணியர் நிழற்கூடம் கட்டும் பணி என மொத்தம் 5.08 கோடி மதிப்பீட்டில் 24 புதிய வளர்ச்சித் திட்டப் பணிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.*

*இப்பணிகள் அனைத்தும் தரமாகவும், உறுதியாகவும் உரிய கால அளவில் முடித்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவருமாறு தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு செந்தில்பாலாஜி தெரிவித்தார்.*

*இந்நிகழ்ச்சியில் குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் இரா. மாணிக்கம். உதவி இயக்குநர் ஊராட்சிகள் சரவணன், கரூர் வருவாய் கோட்டாட்சியர் முகமது பைசல், கரூர் வட்டார வளர்ச்சி அலுவலர் விஜயலட்சுமி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.*



முதலமைச்சர் அவர்களின் "தாயுமானவர் திட்டம்" மூலம் மாற்றுத்திறனாளிகள், முதியோர்கள் இல்லத்திற்கே நேரில் சென்று குடிமைப் பொருட்கள் வழங்கும் நிகழ்வு திருவையாறு சட்டமன்ற தொகுதி, பூதலூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட கடம்பன்குடி ஊராட்சியில் தஞ்சை மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ., தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி ஆகியோர் துவக்கி வைத்தனர். இந்நிகழ்வில் ஒன்றியக் கழகச் செயலாளர் சு.முருகானந்தம், அசோக்குமார் மற்றும் அரசு அலுவலர்கள் மற்றும் ஒன்றிய, கிளைக் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.




மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை நகர திமுக சார்பில் மயிலாடுதுறையில் அண்ணா பகுத்தறிவு மன்றத்தில் கலைஞர் மனசாட்சியாக விளங்கிய முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலி மாறன் அவர்களின் 92 வது பிறந்த நாளை முன்னிட்டு அவரது திருவுருவப்படத்திற்கு மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார் உடன் மயிலாடுதுறை நகரக் கழக செயலாளர் குண்டாமணி (எ) என்.செல்வராஜ், பொதுக்குழு உறுப்பினர் எஸ். சங்கரநாராயணன், மற்றும் மயிலாடுதுறை நகர கழக நிர்வாகிகள் உள்ளன.